சி.பி.சி.எல் நிறுவனத்தில் ஏற்கனவே நிலையங்கள் உள்ளன. இதில 4,500

## மார்க் ஸ்வர்ண பூமி தொழிற்பயிற்சி மையத்தில்

# கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பயிற்சி



சென்னை, மே 23:

கட்டுமானத் துறையில் பிரபலமாக விளங்கும் மார்க் நிறுவனத்தின் சிறப்பு பொருளாதார மண்டலமான ஸ்வர்ண பூமியில் தொழிற்பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்து அவர்களை தொழில் நிறுவனங்களின் தேவைக் கேற்றவர்களாக தயார்படுத்துவதே இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும். இவ்விதம் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்காக பிபிஓ எனப்படும் வெளிப்பணி ஒப்படைப்பு மையத்தையும் எக்ஸ்ம்ப்ளர் வேர்ல்ட்வைட் என்ற பெயரில் இந்நிறுவனம் தொடங்கியுள்ளது.

இதற்கான தொடக்க விழா நேற்று நடைபெற்றது. பிபிஓ மையம், தொழில் பயிற்சி மையங்களை சிடிஎஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் லஷ்மி நாராயணன், இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் வி. ராமகோபால், மார்க் நிறுவன மேலாண் இயக்குநர் ஜி.ஆர்.கே. ரெட்டி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

புதிய மையம் குறித்து எக்ஸ்ம்ப்ளர் வேர்ல்ட்வைட் நிறுவன மேலாண் இயக்குநர் ரஜினி ரெட்டி கூறியதாவது:-

கிராமப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் நோக்கில் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இம்மையம் உருவாக்கப் பட்டது.

முதல் கட்டமாக பினிஷிங் பள்ளியில் 40 பேர் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் எக்ஸ்ம்ப்ளர் வேர்ல்ட்வைட் மையத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டது. பினிஷிங் பள்ளி ஒரே சமயத்தில் ஆயிரம் பேருக்கு பயிற்சி அளிக்கும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களது ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பது அல்லது புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பணிகளை இந்த பள்ளி மேற்கொள்ளும்.

இந்த மையம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றி உள்ள 42 கிராம மக்கள் பயன்பெறும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. இதற்காக இப்பகுதியைச் சுற்றி உள்ள இளைஞர்கள், பட்டதாரிகளைத் தேர்வு செய்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு அவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது என்றார்.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்து ஜி.ஆர்.கே. ரெட்டி கூறுகையில்,

செங்கல்பட்டு-மதுராந்தகம், திண்டிவனம்-மரக்காணம் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் மிக பிரம்மாண்டமாக இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குடியிருப்புப் பகுதியாக உருவாக்கப்படுவதே இதன் நோக்கம். மேலும் பள்ளி, கல்லூரி, தொழில்பயிற்சி அதைத் தொடர்ந்து வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்றை அளிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதே நோக்கமாகும்.

சேவைத் துறையில் சிறப்பிடம் பெற்ற பகுதியாக இதை உருவாக்குவதே நோக்கம் என்று அவர் கூறினார்.